# 5 இயேசுவின் இளமைப் பருவம்

இயேசு தனது இளமைக் காலத்தில் கடவுளாலும் மனிதராலும் போற்றப்பட்டு வளர்ச்சி அடைந்தார். அவ்வாறே எருசலேம் கோவிலை கடவுளின் இல்லமாகக் கருதி செயல்பட்டார். இளமையிலும் கடவுளைப் பற்றி நன்கு அறிந்திருந்தார். இவற்றைக்குறித்து இப்பாடத்தில் நாம் கற்பதன் மூலம் சிறியோர் எமது வாழ்விற்கான முன்மாதிரியையும் சவாலையும் நாம் பெற்றுக்கொள்கின்றோம்.





படம் 5.1 இயேசு திருக்கோவிலில் போதகர்களின் நடுவில்

இயேசுவுக்குப் பன்னிரண்டு வயது ஆனபோது, மரியாவும் யோசேப்பும் இயேசுவை அழைத்துத்துக்கொண்டு எருசலேம் கோவிலுக்குப் போனார்கள்.

யூத சட்டத்துக்கு அமைய பன்னிரண்டு வயதை அடைந்த ஆண் பிள்ளைகள், பெரியவர்களாக கருதப்படுவதாலும், அப்பருவத்தில் இருந்து திருக்கோவில் வழிப்பாட்டில் பங்கு பெறவும், சமயக் கல்வியைப் பெறவும், திருக்கோவிலில் நடைபெறும் விழாக்களில் பங்குபெறவும் அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படும்.

யூத மக்களின் பாஸ்கா விழாவுக்காகவே இயேசுவும் பன்னிரண்டு வயதில் திருக்கோவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இயேசுவின் பெற்றோரும் உறவினர்களும் ஒன்றாக கோவிலுக்கு இவ்விழாவினிமித்தம் சென்றார்கள்.

இயேசு உயிர்த்தெழுந்ததை சில கிறிஸ்தவர்கள் பாஸ்கா என்று கொண்டாடுவார்கள். யூத பாஸ்கா கிறிஸ்தவர்களின் பாஸ்காவினின்று வேறுபட்டது.

யூதர்களின் வரலாற்றின் முக்கியமான நிகழ்வை நினைவுகூரும் விழாதான் அவர்களின் பாஸ்கா. அதாவது இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக வாழ நேரிட்டது. அப்போது அவர்கள் தமது துன்பங்களைக் கூறி இறைவனிடம் மன்றாடினார்கள். கடவுள் மோசே மூலம் அவர்களை விடுதலை செய்து கானான் தேசத்திற்கு அழைத்துச் சென்றார். இச்சம்பவத்தை நினைவுகூரும் விழாதான் பாஸ்கா விழா. யூதர்கள் ஒவ்வொருவரும் இவ் விழாவைக் கட்டாயமாகக் கொண்டாடுவார்கள். அதற்காக அவர்கள் குழுக்களாக எல்லா இடத்தில் இருந்தும் எருசலேம் கோவிலுக்கு வருவார்கள். அவ்வாறே மரியாவும் யோசேப்பும் பன்னிரண்டு வயதை அடைந்த இயேசுவும் எருசலேம் கோவிலுக்குப் போனார்கள்.

விழா கொண்டாட்டங்கள் நிறைவு பெற்றதும் மரியாவும் யோசேப்பும் தமது வீட்டுக்குச் சென்றார்கள்.

இயேசுவோ எருசலேமில் தங்கிவிட்டார்.ஆனால் இயேசுவின் பெற்றோர் அதை அறிந்திருக்கவில்லை. அவர் தமது உறவினர்களுடன் இருப்பார் என்று கருதினார்கள். பயணம் முடிந்த பின் அவரைக் காணாது எல்லா இடமும் தேடினார்கள். அவரையோ அவர்கள் கண்டுகொள்ளவில்லை. அதனால் அவர்கள் எருசலேம் கோவிலுக்கு

மீண்டும் திரும்பி வந்தார்கள். அங்கு அவர் போதகர்கள் நடுவில் இருந்து, அவர்கள் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக்கொண்டும் இருப்பதைக் கண்டார்கள். தாம் பார்த்ததையிட்டு இயேசுவின் பெற்றோர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டிருப்பார்கள்.



படம் 5.2 இயேசுவும் மரியாவும்

மகனைக் கண்ட தாய் மரியா அப்போது இயேசுவிடம் ''மகனே, ஏன் இப்படிச் செய்தாய்?''என்று கேட்டார். அதற்கு இயேசு,''நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் எனது தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டார்.

பின் இயேசு அவர்களுடன் தமது ஊரான நாசரேத்துக்கு திரும்பிச் சென்று பெற்றோருக்கு பணிந்து நடந்தார்.

**இந்த சம்பவத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன என்று பார்ப்போம்.**

* மரியாவும் யோசேப்பும் இயேசுவை தேடிக்கண்டு பிடித்தபோது இயேசு கூறியவை எமக்கு சிறந்த வழிகாட்டலாகும். ''நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்பதே இயேசுவின் பதிலாக இருந்தது. (சிலதிருமறையில் ''நான் எனது தந்தையின் வீட்டில் தங்கியிருக்க வேண்டும் என்பதை அறிவீர்களா?'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது). கடவுளுடன் எமக்கு இருக்க வேண்டிய தொடர்பை இயேசுவின் இயேசுவின் இப்பதில் எடுத்துக்காட்டுகின்றது. கடவுளை எமது தந்தையாக நாம் கருதி எப்போதும் கடவுளுடன் தொடர்பு கொண்டு வாழ வேண்டும்.

* பெற்றோருக்குப் பணிந்து இயேசு நாசரேத்தில் வாழ்ந்தார். இறை மைந்தனான இயேசு வீட்டில் பெரியோருக்குப் பணிந்து வாழ்ந்தார். இப்பணிவு எல்லா சிறுபிள்ளைகளுக்கும் ஒரு முன்மாதிரியாகும். பெற்றோரை இயேசு மதித்து வாழ்ந்தார் என்பதை அவரின் பணிவு எடுத்துக் காட்டுகின்றது. எமது பெற்றோருடன் எமக்கு இருக்கும் உறவை மேலும் பலப்படுத்தி சிறுவர் நாம் வளர்ச்சி அடைவோமாக.

* இயேசு இப் உலகில் சிறுபிள்ளையாக வளரும் போது கடவுளாலும் மனிதர்களாலும் போற்றப்பட்டார். எல்லா வழிகளிலும் இயேசு நல்ல பிள்ளையாக காணப்பட்டார் என்பதை இது காட்டுகின்றது. இன்றைய உலகில் சிறு பிள்ளைகளுமே தாம் எதிர்நோக்கும் தடைகள், சவால்கள் என்பவற்றின் மத்தியில் நல்லபிள்ளைகளாக வளரவேண்டும் என்பதற்கான வழிகாட்டலாக இயேசுவின் நடத்தை அமைகின்றது.

***மனனவசனம்:***
***லூக்கா 2:51-52***

**பின்பு அவர் அவர்களுடன் சென்று நாசரேத்தை அடைந்து அவர்களுக்குப் பணிந்து நடந்தார். அவருடைய தாய் இந் நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார். இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்.**

செயற்பாடு

1. 12 வயதில் இயேசு கடவுளுடனான தொடர்பை வளர்த்துக் கொண்டவிதத்தில் நீரும் கடவுளுடனான தொடர்பை வளர்க்கும் சந்தர்ப்பங்கள் 3 தருக.

2. ''நான் எனது தந்தையின் வீட்டில் இருக்கவேண்டும்'' என்ற இயேசுவின் கூற்றை நீர் எவ்வாறு விளங்கிக் கொள்கின்றீர்?